செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 மார்ச்சு 2001 பகுதி : 3

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1.

செந்தமிழ்

திங்கள் இதழ்

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 2000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

மதிப்புறு ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1.

பொருளடக்கம்

1. மெய்யுணர்வு பெறுகின்ற வாழ்வியல் 77
க.சி.அகமுடை நம்பி

2. கம்பர் நெறி 84
செ.வைத்தியலிங்கன்

3. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை 100
பா. சூரிய நாராயணன்

மெய்யுணர்வு பெறுகின்ற வாழ்வியல்

க.சி. அகமுடை நம்பி

நம்மில் பெரும்பாலோர் தெளிவற்ற நிலையில் வாழ்ந்து வருகிறோம். பிழைப்புக்காக ஏதேனும் ஒரு வேலையைத் தேடிப் பெறுகிறோம். நாளடைவில் அந்த வேலையில் விறுவிறுப்பு குறைகிறது; சோர்வு மேலிடுகிறது, என்றாலும் அந்த வேலையை நம்மால் விட்டுவிட முடிவதில்லை. மனச்சோர்வுடன் கூடிய இந்த வாழ்வு நமக்குப் பழகிப் போகிறது. நம் வாழ்வில் இறுதிவரை இதே நிலைதான் என்றாகிறது. செல்வந்தராக நாம் இருந்தாலும், நுண்ணிய புலமையுடையவராக இருந்தாலும், தத்துவப் பார்வை நமக்கிருப்பினும், நம் வாழ்வின் பெரும்பகுதி ஆழமில்லாமல், மேலோட்டமானதாகவே இருந்து வருகிறது. இந்த வாழ்வின் நிறைவின்மையை நாம் உணர்கிறோம். இந்த நிலையை மாற்றிக்கொள்ளப் பல வழிகளில் முயன்று பார்க்கிறோம். அதற்காக, அறிவைப் பெருக்கிக் கொள்வது, ஏதேனும் ஒரு வகையில் சமூகத்தொண்டு புரிவது, கேளிக்கைகளை நாடிச்செல்வது அல்லது ஒரு சமயத்தை (Religion)நம்பிக்கையுடன் பற்றிக்கொள்வது, என்றிவ்வாறு பல்வேறு வழிமுறைகளைக் கையாள்கிறோம்.

மனச்சோர்வை உண்டாக்குகின்ற நம்முடைய இந்த வாழ்வியலுக்கு அப்பால், உலகியல் சார்பில்லாத ஒன்றைப் (unwordly state of being) பெற்றிட முயல்கிறோம். அந்த ஒன்றை என்ன பெயரிட்டுக்கூறுவது? மெய்ப்பொருளறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தி இதனை 'மற்ற தன்மை' என்று தம்முடைய உரைகள் சிலவற்றில் கூறியுள்ளார். மற்ற தன்மை என்பதை 'மறுமை' என்ற ஒற்றைச் சொல்லால் குறிப்பிடலாம். (தற்போதுள்ள நமது நிலைமையை 'இம்மை' எனலாம்). திருவள்ளுவர் இந்த மறுமையை 'மெய்யுணர்வு'என்பார்; 'செம்பொருள்' என்றும் கூறுவார்.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்பது அறிவு (குறள் 358)

இந்த *மற்ற தன்மையை* – *மறுமையை* – செம்பொருளைக் கண்டறியப் பல வழிமுறைகளை நாம் கடைப்பிடிக்கிறோம். குறிப்பிட்ட ஓர் ஒழுக்க நெறியில் நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்வதன் மூலம்,

குறிப்பிட்ட ஒரு தியான முறையில் பயிற்சி பெறுவதன் மூலம், சில சடங்குகளை நிறைவேற்றுவதன் மூலம் அல்லது சில மந்திரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அதனைப் பெறலாம் என்று நம்புகிறோம்.

நமது அன்றாட வாழ்க்கை, 'இன்பம் - துயரம் - இன்பம் - துயரம்' என்றவாறு ஒரு முடிவற்ற வட்டத்தைச் சுற்றியபடி உள்ளது. பொருளியற் செழுமை, வளமான மன வாழ்க்கை, நல்ல மக்கட்செல்வம், சீரிய சிந்தனை வளம் என்றிவ்வாறு ஒருவரின் உடைமைகள் சிறப்பாக அமைந்திருந்தாலும் கூட, மெய்யுணர்வு இல்லாத வாழ்க்கை வெறும் மனச்சோர்வுக்கும் வெறுமைக்குமே அவரை இட்டுச்செல்கிறது. மெய்மை சாராப் பொருள்களையெல்லாம் சிறப்பான உடைமைகள் என்று கொள்கின்ற மனித வாழ்க்கையில் ஒருவர் பெறுவது வெறும் மயக்க நிலையே. இதனைப் "பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருள்" என்பார் வள்ளுவர்.

ஆக, அந்த மற்ற தன்மையை - மறுமையை - மெய்யுணர்வை எப்படிப் பெறுவது, அல்லது அதனைப் பெறவே முடியாதா என்ற வினா எழுகிறது. நமது மனதை உள்ளது உள்ளபடி ஆராய்ந்து பார்த்தால், அது ஒரு சிறிய வட்டத்திற்குள் கட்டுண்டதாக, வயக்குற்றதாக(conditioned) இருப்பது தெளிவாகும். சின்னஞ்சிறிய இந்த மனம் பேருண்மையாகிய மறுமையை - செம்பொருளைப் பற்றிப் பலபட நினைத்துப் பார்க்கிறது; அதனைப் பெறத் திட்டமிடுகிறது. அந்த நினைப்பும் திட்டமும் மனதின் சிறிய எல்லைக்கு உட்பட்டதாகவே இருக்கும் அல்லவா?

அந்தப் பேருண்மையை- மறுமையைப் பட்டறிதல் என்பது இந்தக் குறுகிய மனதால் இயலாது என்பது தெளிவாகிறது. இதனைப் புரிந்து கொள்கின்ற நிலை நம் வாழ்வியலில் ஒரு மிகப் பெரிய சிறப்பு நிலையாகும். குறுகிய வட்டத்துள், ஆழம் இல்லாமல் மேலோட்டமாக இயங்குகின்ற-மனம், அளவிடற்கரிய அந்த மற்ற தன்மையை - மறுமையை-மெய்யுணர்வைத் தேடிச்செல்கின்ற எந்த முயற்சியும் ஒரு தடையாக, முட்டுக் கட்டையாகவே இருக்கும் என்பதைப் புரிந்துகொள்கின்ற நிலை, இந்தச் சிக்கலை அணுகுதற்குரிய மாற்று வழிமுறையொன்றின் தொடக்கமாக அமைகிறது.

ஆயிரமாயிரம் நேற்றைய நாள்களின் விளைபொருளாக நமது மனம் உருப்பெற்றுள்ளது. அறிந்தவற்றின் பின்னணியில் நாம் பெறுகின்ற பட்டறிவின் விளைபொருள் இந்த மனம். அறிந்தவற்றின் தொடர்ச்சி இது. இதன் அறிவு எவ்வளவு விரிவானதாக இருப்பினும், அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற்றதாக இருப்பினும், அது காலத்தின் விளைபொருளேயாகும். ஆகவே அது ஓர் எல்லைக்குள் வரையறுக்கப்பட்டது. கட்டுண்ட நிலையில் இருப்பது. இந்த மனதால் அந்த மற்ற தன்மையை மறுமையை அறிந்துணர முடியாது என்பதைப் புரிந்து கொள்கின்ற இந்தக் கட்டம், அந்த மறுமை நிலை நம்மை ஆட்கொள்வதற்கு ஏதுவாக வாயிலைத்திறந்து வைக்கின்ற ஒரு வாழ்வு முறையைக் கண்டுகொள்வதற்கான தொடக்கம் என்பது புலனாகிறது.

ஓசையற்ற அமைதி நிலையில் மனம்

இந்தச் சிக்கலின் பரிமாணம் இன்னும் தெளிவுபடவில்லை. முடிவில்லாமல் முயன்று கொண்டும், பிதற்றிக்கொண்டும், திட்டமிட்டவாறும் உள்ளது மனம். அளவிடற்கரிய நுட்பங்களும் கண்டுபிடிப்புகளும் உரிய வல்லமை படைத்தது இந்த மனம். இதன் இயக்கங்கள் அனைத்தும் இறந்த காலத்தின் எதிர்வினைகளே(reactions).இத்தகைய மனம் எவ்வாறு அமைதியாக இருக்கக்கூடும்? கட்டுப்படுத்தி அதனை அமைதியுறச் செய்யலாம். ஆனால், அப்படி வரவழைக்கப்படும் அமைதி, எதையும் ஆராய்ந்து அறிய முடியாத ஒரு தேக்கநிலையேயாகுமன்றோ? ஆகவே அறியப்படாத அந்த மற்ற தன்மையை - மறுமையை - செம்பொருளை எதிர்கொள்ளக்கூடிய திறந்த மனநிலை ஒரு போதும் நம்மிடம் இருப்பதில்லை.

இந்தச் சிக்கலை இந்தப் பரிமாணத்தில் இதுவரை நாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம். நமது மரபு முறையில் எண்ணிப் பார்த்திருப்போம். அதாவது, கற்பனையாக ஒன்றைக் கருதிக்கொண்டு, அதை நோக்கி ஒரு குறிப்பிட்ட ஒழுகலாற்றின் மூலம் முயன்று காணலாம் என்று நினைத்திருப்போம். ஒழுக்கம் என்பது அடக்குதல் அல்லது கட்டுப்படுத்துதல். ஆகவே அது ஓர் இருமையின் (duality) போராட்டம் என்பது தெளிவு. இவையாவும் மனம் என்ற சிறிய பகுதிக்குள் நடப்பவை. இந்தப் போக்கிலேயே அந்த மற்ற தன்மையை-மறுமையை அடைந்திட முயற்சி

செய்கிறோம். ஆனால். இவ்வாறெல்லாம் மனம் அதனைக் கைப்பற்ற முடியுமா என்பதை அறிவுப் புலன் வழி (intelligence) ஒரு போதும் நாம் ஆராய்ந்து பார்த்ததில்லை. அதற்கு எந்த ஓசையும் இல்லாமல் மனம் அமைதியில் வீற்றிருக்க வேண்டும் என்ற முக்கியக் குறிப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது.

அத்தகு அமைதி நிலையை ஒழுக்கத்தின் மூலம், மனதைக் கட்டுப்படுத்துகின்ற பயிற்சியின் மூலம் பெற்றிட முயல்கிறோம். அமைதியான மனம் எதுவென்ற ஒரு கருத்தை வைத்துக்கொண்டு, மனதை அடக்கிக் கட்டுப்படுத்திப் போராடுகின்ற முறையில் அதனைப் பெற முயல்கிறோம்.

இப்போது, மனதின் இந்த மொத்தச் செயல்முறையையும் உற்று நோக்கினால். இது யாவும் அறியப்பட்ட மனப் பகுதிக்குள்ளேயே அடங்கியிருப்பதைக் கண்டுகொள்ளலாம். தான் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காணுகின்ற மனம், மென்மேலும் பெருகிவரும் பட்டறிவு ஏற்படுத்துகின்ற சோர்வு நிலையைப் புரிந்து கொண்டு, அந்த மற்ற தன்மையை - மறுமையைப் பெற்றுவிட வேண்டுமென்று, எப்போதும் முயன்ற வண்ணம் உள்ளது. ஆனால், அறியப்பட்டவற்றின் உருவாக்கமான இந்த மனம், எவ்வளவு முயன்றாலும், அறிவுக்கு அப்பாற்பட்ட அந்த மற்ற தன்மையை - மறுமையைப் பெற்றிட இயலாது என்பதை உணர்ந்து கொள்கிற நிலையில், நமக்கு முன் உள்ள சிக்கல், அந்த மற்ற தன்மையை எப்படிப் பெறுவது என்பதில்லை; ஏற்கனவே அறியப்பட்டவற்றிலிருந்து மனம் எப்படித் தன்னைத்தானே விடுவித்துக் கொள்வது என்பதே. இதுதான் இப்போது நம் முன்னர் உள்ள சிக்கல்.

அறியப்பட்டவற்றிலிருந்து விடுபடுதல்

ஏற்கனவே நாம் கண்டுள்ளவாறு, தற்போதுள்ள நமது மனம் - உணர்வுள்ள மனமும் உணர்வற்ற மனமும்(conscious and unconcious) - கடந்த காலப் பொருளாக உள்ளது, நம் இனம், நம்மைச் சுற்றியுள்ள தட்ப வெட்ப நிலை, நமது உணவு முறை, மரபு முறை போன்ற பல பாதிப்புகளின் மொத்த விளைவாக உள்ளது; நான் கிறித்தவன், இந்து, புத்த சமயத்தவன் அல்லது பொதுவுடமைக் கோட்பாட்டைச் சார்ந்தவன் என்றவாறு கட்டுண்ட நிலையில் (conditioned) உள்ளது. உண்மையை அறிந்து கொண்டதாக ஒன்றை

இந்த மனம் வெளியிடுகிறது. அந்த வெளிப்பாடு, வருங்காலத்தை அறிந்து கொண்டதாகக் கருதிக் கொண்டு, இன்ப உலகம் என்ற தன்னுடைய கற்பனை உலகத்தின் (Utopia) வடிவமைப்பில் மனித இனத்தை வலுக்கட்டாயமாகக் கொண்டு வர விரும்புகின்ற ஒரு பொதுவுடைமைக் கோட்டுபாட்டினருடையதாயினும் சரி, அல்லது அதே போன்று, வருங்காலத்தை அறிந்து கொண்டதாகக் கூறி, பள்ளிச் சிறார்களைத் தன்னுடைய போக்கிலேயே சிந்திக்கச் செய்கின்ற முறையில் அவர்களுக்குப் பாடம் போதிக்கின்ற ஒரு சமயச் சார்பாளராயினும் சரி, இந்த இருவரின் வெளிப்பாடும் உண்மையன்று.

மெய்மையற்ற நம்முடைய வாழ்க்கை தெளிவற்றதாக, மழுங்கலாகவே உள்ளது. அந்த மற்ற தன்மையை - மறுமையைப் பெறுகின்ற முயற்சியில் வெறும் கற்பனை மனிதர்களாக, அல்லது உணர்வெழுச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வெறும் உணர்வாளர்களாக இருந்து வருகிறோம்

ஆக, இப்போது நம் முன்னுள்ள சிக்கல், அறிந்தவற்றிலிருந்து நமது மனம் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள இயலுமா என்பதுதான். இங்கு, அறிந்தவை என்று குறிப்பிடுவது கடந்த காலத்து உளவியல் சேகரிப்பே, நமது அன்றாட செயல்பாட்டறிவு இதில் சேராது. இதிலிருந்து மனம் விடுபடுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில், ஒருவர் தன் அலுவலகத்துக்குப் போகின்ற வழியை மறந்துவிட்டால், பிழைப்புக்குரிய தொழில்முறை அறிவை மறந்துவிட்டால், அவர் பித்தநிலையின் விளிம்புக்கே தள்ளப்படுவார். ஓர் அமைப்புடன் சேர்வதால், சார்பை ஏற்படுத்திக் கொள்வதால், வாழ்வில் ஒரு பாதுகாப்பை எவை உறுதிப்படுத்துவனவாக உள்ளனவோ அந்த அறியப்பட்ட உளவியற் கூறுபாடுகளிலிருந்து மனம் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள இயலுமா? இப்போது நமக்கு முன் உள்ள சிக்கல் இதுதான்.

இதனை ஆராய்ந்தறிய, எண்ணத்துக்கும் எண்ணுபவர்க்கும், கவனிப்பவர்க்கும் கவனிக்கப்படுகின்ற பொருளுக்கும் வேறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும். தற்போதுள்ளபடி அவற்றுக்கிடையே பிரிவு அல்லது இடைவெளி உள்ளது. பட்டறிகின்ற அந்த 'நான்' எனப்படும் பொருள், பட்ட அறிவிலிருந்து வேறானது என்று நாம் நினைக்கிறோம். அதனால்தான் 'எண்ணத்தை நான் கட்டுப்படுத்த வேண்டும்'என்று நாம் சொல்லிக் கொள்கிறோம். ஆனால், 'நான்' என்கின்ற எண்ணுபவர், எண்ணத்திலிருந்து

வேறுபட்டவரா? இல்லை என்பது தெளிவு. எண்ணுபவராகத் தனியொரு பொருளைப் படைக்கின்ற அந்த எண்ணுகின்ற செயல்தான் உண்மை. எண்ணுகின்றவராகக் கருதப்படுகின்ற அந்த ஒருவரை நாம் எவ்வளவு பெரிய இடத்திலும் வைத்துக்கொள்ளலாம். ஒரு மாமனிதராகவே, ஒப்பற்ற உயிராகவே அவரை நாம் சொல்லிக்கொள்ளலாம். ஆனாலும் அவர், எண்ணங்களின் உருவாக்கமேயாவார். எண்ணுகின்றவராக ஒருவர் இருந்து கொண்டு எண்ணத்தைப் படைப்பதில்லை. எண்ணங்களே எண்ணுகின்ற ஒரு தனிப்பொருளை உருவாக்கிக் கொள்கிறது. நாம் அனைவரும் அதைத்தானே விரும்புகிறோம்.

தன் முனைப்பு நீங்கிய நிலை :

எண்ணங்கள் - எண்ணுகின்றவர், என்ற இந்த இருமை நிலை (duality) இருக்கின்ற வரையில், போராட்டமும் விருப்பம் (will) சார்ந்த முயற்சிகளும் இருந்து கொண்டேயிருக்கும். 'நான் கடந்த காலத்திலிருந்து விடுபட வேண்டும்' என்று சொல்லிக்கொண்டு, தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள முனைகின்ற மனம், இன்னொரு வடிவமைப்பை- படிவத்தை உருவாக்கிக்கொள்கிறது.

'நான்' என்பது ஒன்றை விரும்பி, அதனை அடைந்திட முயலுகின்ற செயல்பாடுகள் என்று எதுவும் இல்லாமலிருக்கும் நிலையில், மனம் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ளக்கூடும். அந்த நிலையில், ஒரு வேளை, அந்த மற்ற தன்மை மறுமை இயன்று வரலாம். ஆனால், நம் வாழ்வு முழுதும் முயற்சியை அடித்தளமாகக் கொண்டே இயங்கி வருகிறது. நல்லவனாக ஆகின்ற முயற்சி, நமக்குள் ஓர் ஒழுக்கத்தை நிலை நிறுத்துகின்ற முயற்சி, இந்த உலகில் அல்லது அடுத்த உலகில் ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்று மேற்கொள்கின்ற முயற்சி என்றவாறு, நமது ஒட்டுமொத்த வாழ்வும் முயற்சி மயமாகவே இருந்து வருவதைப் பார்க்கிறோம். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும், முயற்சி, விருப்பம், - வேட்கை, வெற்றி, சாதனை என்ற போக்கிலேயே அமைகிறது.

ஆகவே, கடவுள் அல்லது பேருண்மையை அறிந்துணர்வதும் முயற்சியின் மூலமே கைகூடும் என்று நாம் நினைக்கிறோம். அத்தகைய முயற்சிகள், சாதிக்க வேண்டும் என்கின்ற தன் முனைப்பையே காண்பிக்கிறது. 'நான்' என்பதைக் கைவிடுகின்ற

செயல் இதுவன்று.

உணர்வுள்ளதும் உணர்வற்றதுமாகவுள்ள இந்த மனதின் மொத்தச் செயல்முறைகளை நாம் காண்போமாயின், மெய்யாகவே இதனைக் கண்டுணர்ந்து புரிந்து கொள்வோமாயின், அப்போது, எந்த முயற்சியுமின்றி நமது மனம் அளவிடற்கரிய அமைதியில் ஆழ்வதைக் காணலாம். ஒழுக்கத்தால், கட்டுப்படுத்தப்படுவதால், மனதை அழுத்தி வைப்பதால் ஏற்படுகின்ற அமைதி, மரண அமைதியைப் போன்றது. நாம் இங்கே குறிப்பிடுகின்ற அமைதி நிலை முற்றிலும் வேறானது. இந்த அமைதிநிலை, முயற்சி எதுவுமின்றி மனதின் ஒட்டுமொத்தச் செயல்முறையை ஒருவர் காணுகின்ற நிலையில் வருவதாகும்.இந்த அமைதி நிலையிலேதான் உண்மை என்றோ, கடவுள் என்றோ, செம்பொருள் என்றோ சொல்லப்படுகின்ற அந்த மற்ற தன்மை - மறுமை, இயன்று வரலாம்.

மெய்ப்பொருளறிஞர் ஜே. கிருஷ்ணமூர்த்தி விவரிக்கின்ற வாழ்வியல் இது. இத்தருணத்தில், வள்ளுவப் பேராசான் வழங்கியுள்ள,

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

எனும் குறளை (குறள் 352) நினைவு கூர்வோம்.

இந்த 'மாசறு காட்சி' வரப்பெறுவதற்கு மனம், இயல்பான முறையில், அமைதியில் திளைக்க வேண்டும். இந்த அமைதிநிலை வருவதற்கு, மனதை மனம் 'பார்க்க' வேண்டும். அதனை வகைப்படுத்தக்கூடாது. வேண்டுதல் வேண்டாமை என்று பிளவுபடுத்தலாகாது. எதனையும் எதிர்க்கவோ ஆதரிக்கவோ, மறுக்கவோ ஏற்கவோ கூடாது. அதாவது, நம் மனம் தேர்வற்ற விழிப்புணர்வில் வீற்றிருக்க வேண்டும். அப்போது, அந்த நிலையில், கதவு திறக்கப்படலாம்; மாசறு காட்சி வரப்பெறலாம்.

பின்குறிப்பு:

ஜே.கிருஷ்ணமூர்த்தி பிறந்த ஊரான 'மதனபள்ளி'யில் 1956பிப்ரவரியில் ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆற்றிய உரையின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கம்பர் நெறி

'பண்பாட்டுச் செல்வர்'
செ.வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்.,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத் தலும்நீக்க லும்நீங்கலா
அலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

-கம்பர்

"அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி யென்னும்
அணி நகரத் துலகனைத்தும் விளக்குஞ் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன்தன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே."

-குலசேகரப்பெருமாள்

முன்னுரை :

தமிழ்நாட்டு மகாகவியாகிய கம்பர், தம் வாழ்க்கையால் உலகத்துக்குப் பயன்படும் வகையில் திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளார். குறிக்கோள் பற்றியும்,அதனை எவ்வாறு நன்னெறியில் அடைய வேண்டும் என்பது பற்றியும் தம் மனத்தகத்தே தெளிவாகச் சிந்தித்து அமைத்துக் கொண்டார். இந்தத் தொடர்பில் சில கருத்துக்களைக் காண்போம்.

அ. 1. குறிக்கோள்- திருமால் திருவருள் (பரமபதம்)
2. எய்தும் நெறி-பிரபத்திமார்க்கமாகிய அடைக்கலமாதல் (சரணாகதி நெறி)

ஆ. திருமாலின் நிலைகளை உணர்தலும் தேர்தலும்
1. பரத்துவம் 2. வியூகம் 3. விபவம் 4. அந்தர்யாமி
5. அர்ச்சை

இ. திருமாலுக்குக் கைங்கரியம் - திருத்தொண்டு - புரிய, அடிப்படையாகத் திருமாலின் கலியாணகுணங்களை உணர்தல் வேண்டும். (கலியாணங்களாகிய 1.ஞானம் 2.பலம் 3.ஐசுவரியம் 4.வீரம் 5.சக்தி 6.தேஜசு ஆகியவற்றையும், வேறொரு கோணத்தில் இறைவனது 1.சௌசீல்யம் 2.சௌலப்யம் 3.சௌந்தரியம் 4.வாத்சல்யம் ஆகியவற்றையும் உணர்தல் வேண்டும்)

ஈ. திருமாலின் பெருமையை உலக மக்கள் புரிந்துகொள்ளக் கம்பர் மேற்கொண்ட உத்திகள் - உபாயங்கள்.

1. பாரகாவியமாக - இதிகாசமாக- வான்மீகியைப் பின்பற்றி இராமாயணம் பாட முனைந்தமை

2. நெடிய காப்பியத்தைப் பலரும் போற்றும் வகையில் காண்டம், படலம் எனப் பிரித்துக் கொண்டு, பல்வகைச் சந்த நயங்களுடன் விருத்தப்பாவில் அதைத்துள்ளமை

3. கம்பர் தாம் கொண்டுள்ள சிந்தனைகளைக் கூடிய வரையில் தூயதமிழில் பாடத் துணிந்தமை

4. பாடுபொருள்களுக்கு ஏற்ப முன்னோர் சென்றுள்ள சமய அணுகுமுறைகளையும் இலக்கிய அணுகுமுறைகளையும் போற்றிக் கைக்கொள்ளுதல்.

   இவ்வாற்றான் (அ) சங்க இலக்கியம், திருக்குறள் போன்றவற்றையும் (ஆ) ஆழ்வார் பாசுரங்களையும் பயின்று மனத்துட் கொண்டு, அவற்றைத் தக்க இடங்களில் பயன்படுத்துதல்.

5. படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, பொருள் நுவற்சிக் கற்பனை முதலிய கற்பனைகளை மனங்கவரும் வகையில் கையாளுதல், அதுவும் பாத்திரப்படைப்பில் திறமை பளிச்சிடுதல்

6. வான்மீகி பாடிய இராமாயணம் முதல் நூலாக இருப்பினும், தமிழ்ப் பண்பாட்டுக்கேற்பச் சில

இடங்களில் மாற்றிக் கொள்ளும் துணிவுடைமை

7. நிகழ்ச்சிகளினூடே இராமகாதையின் நோக்கம் நிறைவேறும் வகையில், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருள்களைக் கூறுவதும், தத்துவங்களையும் இழையோடச் செய்து, சமயநூலின் நோக்கம் நிறைவேற்றிக் கொள்வதும்

8. இராமாயணத்தில் காணலாகும் சில கதைமாந்தர்கள் வாயிலாகத் தவத்தின் மாட்சியைப் புலப்படுத்தும்பாங்கு

9. காப்பியப் போக்கிற்கேற்பக் கவின் கலைகளின் பயன்பாட்டினைக் கொண்டு செலுத்தும் கவிநேர்த்தி.

இராமாயண நுண் பொருள்களும் கம்பர் புலப்படுத்தும் கைவண்ணமும்

1. இராமாயணம், இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்டு இலங்கைவரையில் சென்று இராவணன் முதலிய அரக்கர்களை வென்று மீண்டும் அங்கிருந்து அயோத்தி திரும்பி முடிசூடிக் கொள்ளுதல். இவ்வாறாக இராமன் மேற்கொள்ளும் பயணம்- அயணம்- இராமாயணம் ஆகும். இப்படியான செலவு இராமனது குலமுதலோனாகிய சூரியன் வடக்கிலிருந்து தெற்குநோக்கிச் செல்லும் தட்சணாயணத்தையும் தெற்கிலிருந்து வடக்குநோக்கிச் செல்லும் உத்தராயணத்தையும் நினைவூட்டும் வகையில் அமைந்திருப்பது சிந்தித்தற்குரியது.

2. 'திருமால்' என்பது இலட்சுமி நாராயணனையும் சானகிராமனையும் குறிக்கும்வகையில் அமைந்துள்ளது. திருமால் என்பதில் மாலைத் தனியே விடுத்து திருவைப்பிரிப்பதும் திருவைத் தனியேவிடுத்து மாலைப்பிரிப்பதும் வைணவ நெறிகளுக்கு உகந்ததாகாது. வினைப்பயன் எனும் ஊழ்வினையால் பிரிக்கநேரிடின் பல இடையூறுகள் - துன்பங்கள் நேர்கின்றன. இதனை விளக்கும்வகையில் இராமாயணக் கதைப் போக்கு அமைந்துள்ளது.

3. இராமாயணத்தைச் சரணாகதி வேதம் அல்லது சரணாகதி சாத்திரம் என்று போற்றிக்கூறுவர். சரணாகதிநோக்கில் இறைவனைப் பற்றிக் கொண்டால் அவன் முன் நின்று காத்தருளுவான் என்பது

திண்ணம். மேலும் சரணாகதியடைந்தவர்களை அன்பர்களாகவும் உடன்பிறப்பாளர்களாகவும் ஏற்றுக்கொண்டு அருள் புரிவான் என்பதும் உறுதி. இது நன்கு இராமாயணத்தில் சித்திரிக்கப்படுகிறது. பிரகலாதன், குகன், வீடணன் முதலியோர் அடைக்கலமாதலும் இராமன் அவர்களைப் போற்றிக் காத்தருள் புரிதலுமாகிய நிகழ்ச்சிகள் இராமாயணக் காப்பியத்துக்குப் பொருத்தமுடன் பொலிவூட்டுகின்றன.

4. வேதநெறியையும் வேதநெறியைப்பரவும் ஆழ்வார்கள் நெறியையும் வழிகாட்டியாகக் கொண்டு அவதாரப்பெருமையைக் கூறுதலும் யுகதர்மங்களுக்கேற்பச் செயற்படுதலுமாகிய திருத்தொண்டுகளைக் கம்பர் தலைமேற்கொண்டுள்ளார்.

5. கலியுகத்திற்கேற்ப இறைவன் திருநாமங்களைத் தியானிப்பதாலும் ஓதுவதாலும் பிறப்பெடுத்த பயனைப் பெறலாம் என்று காட்டுகிறார் கம்பர். இக்கருத்திற்கு முன்னோடியாகத் திருநாமச்சிறப்பை வலியுறுத்தும்வகையில் ஆழ்வார்கள் பல இடங்களில் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாகத் திருமங்கையாழ்வார் தாம் பாடியருளிய பெரிய திருமொழியில்,

"குலந்தருஞ் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்" (முதற்பத்து9)

எனவரும் பாசுரத்தில் காணலாம். நாராயணனே இராமனாக அவதாரம் எடுத்து வந்துள்ளமையால் கம்பர் இராமநாமப் பெருமையைத் தக்கவாறு போற்றிப்பாடியுள்ளார்.

வாலிவதைப்படலத்தில், இராமன் ஏவிய அம்பால் வாலி வீழ்ந்து கிடக்கிறான். மார்பில் தைத்த அம்பினைக் கையாலும், கால்களாலும், வாலாலும் பிடுங்கி எடுத்துப் பார்க்கையில், இராம என்று பொறித்திருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறான், எனினும் கம்பர் இடையேபுகுந்து இராமநாமப் பெருமையைப் பாடி நிற்கிறார்,

அஃதாவது வாலி வதைப் படலத்தில்

"மும்மைசா லுலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்குந்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்" (80)

எனப் பாடிச் செல்கிறார்.

இறைவனது திருநாமத்தைப் புகழ்வது இறைவனைப் புகழ்வதாகவே அமையும் என்பது சமய அணுகுமுறையாகும். 'நாராயணநாமம்' இம்மைப்பிறவியிலும் எழுகின்ற பல பிறவிகளிலும் பற்றுக்கோடாக நின்று, பிறவித்துன்பங்களையும் நீக்கி அருளவல்லது என்பதைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாளும் குறிப்பிட்டுள்ளார், இதனை நாச்சியார் திருமொழியில்,

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையு டையான் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்" (6.8)

எனவரும் பாசுரத்தால் உணர்ந்து கொள்ளலாம்.

ஆழ்வார்களைப் பொருத்தவரையில் திருமாலுக்கே அடிமைபூண்டு ஒழுகுபவர்கள் என்பது உண்மை. எனினும், பரந்த நோக்கத்துடன் நான்முகன் சிவபெருமான் முதலிய கடவுளர்களையும் தியானித்துத் திருநாமம் செப்புபவர்களாகவும் இருந்துள்ளனர்.

திருவாய்மொழியில் நம்மாழ்வார், இறைவன் புகழ் உணர்வதற்கு அரியது; அவனுருவத்தை வியந்து திருநாமங்களைப் பலமுறை இறைஞ்சுங்கள் என்று அடியார்களை நோக்கி வேண்டிக் கொள்கின்றார்; இதனை,

"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு
வியந்தஇந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினும் இறைநிலை

யுணர்வரி துயிர்காள்!
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்(து)அரிஅயன்
அரன் என்னும் இவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
மனப்பட்ட தொன்றே" (3. பத்துடை.6)

எனவரும் திருப்பாசுரத்தால் உணர்ந்து மகிழலாம்.

சமயப்பொதுமையும் கற்பனையும் :

இத்தகைய பரந்த மனப்பான்மை திருமங்கையாழ்வாரிடம் உண்டு. நாயக நாயகி பாவத்தில் பல பாசுரங்களைப் பாடிச் செல்லும் அந்த ஆழ்வார் பெரிய திருமடல் சிறிய திருமடல் ஆகியவற்றையும் பாடியுள்ளார். வைணவ அடியாராகிய அவர், சைவப்பெரும் கடவுளாகிய ஆடல் வல்லானது திருக்கரத்தில் மனம் லயித்துள்ளார். பெரியதிருமடல் பாடிச் செல்கையில்,

"மன்னும் மலையரையன் பொற்பாவை - வாணிலா
மின்னும் மணிமுறுவல் செவ்வாய் உமையென்றும் 65

அன்ன நடைய அணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத் *66*

தன்னுடைய கூழைச் சடாபாரம் தான்தரித்து-ஆங்
கன்ன அருந்தவத்தி னூடுபோய் - ஆயிரந்தோள் *67*

மன்னு கரதலங்கள் மட்டித்து, மாதிரங்கள்
மின்னி எரிவீச மேலெடுத்த சூழ்கழற்கால் 68

பொன்னுலகம் ஏழும் கடந்தும்பர் மேல் சிலும்ப
மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும் 69

தன்னி னுடனே சுழலச் சுழன்றாடும்
கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி 70

அன்னவன்றன் பொன்னகலம் சென்றாங்கனைந்திலளே"
71

என வரும் பாடலடிகள் நினைந்துநினைந்து வியத்தற்குரியவை.

ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாகச் சிவபெருமான், திக்கு

எட்டும் மின்னிடும் வகையில் தன் சுழலும் திருவடியால் மேலே எடுத்து (ஊர்த்துவ அமைப்பில்) ஆடுகையில், மேலேழு உலகங்களும் கடந்து திருவடி மேலே செல்கின்றது என்பது குறிப்பு. ஒப்பு நோக்கில் சிந்திக்கையில், வாமனனாக வந்து மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூவடி மண்கேட்டுத் திரிவிக்கிரமனாக மாறி உலகளந்தபெருமாளாகத் தன் திருவடியை மேலுலகங் கடந்து செல்லுமாறு செய்த வித்தகம் ஈண்டு நினைவிற்கு வரலாம். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட கம்பர், சூரியனது காலையிளந் தோற்றத்தை வருணிக்க முற்படுகிறார். அந்த எழில் தோற்றமானது, கின்னரர், விண்ணவர், முனிவர்,வேதியர் முதலானோர் கைகூப்பி நிற்கும் நிலையில், பொன் வண்ணச் சடைகளை விரித்து ஆடுவது போன்று காட்சியளிக்கிறதாம். இதனைக் கம்பர்,

"எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம் குவிப்ப, வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கின்
நடம்புரிவான் இரவி யான
கண்ணுதலவா னவன் கனகச் சடைவிரிந்தா
லென விரிந்த கதிர்க ளெல்லாம்"

எனப்பாடிக் காட்டுவதால் அறியலாம்.

மேலும், ஊழிப்பெருங்கூத்து ஆடிநிற்கும் ஆடல்வல்லானை நினைத்துப் பார்க்கிறார். இந்த அரிய காட்சியை, அசோகவனத்தை அழித்துக் கூத்தாடும் அனுமன் செயலுடன் ஒப்பிட்டு வருணிக்கிறார். இதனை,

"ஊழியின் இறுதிக்காலத்(து) உருத்திர மூர்த்தி ஒத்தான்"

எனப்பாடிக் காட்டுவதால் வியந்து போற்றலாம்.

இத்தகைய கற்பனைகளை ஆராய்கையில், இவை இயைபுக் கற்பனை (Associative imagination) எனக்கூறி மகிழலாம்.

கம்பசித்திரத்தில் மானுட மாட்சி :

திருமாலே இராமன்வடிவில் மானுடனாகப் பிறந்து, வாழ்வியல் மேற்கொள்வதை வான்மீகியும் கம்பரும் நன்கு உணர்ந்துள்ளனர். எனினும், வான்மீகி, இராமனை மாந்தருள் சிறந்தவனாக- அறம் நிறுத்த வந்த மானுடனாக - நோக்கிப் பாடிச்சென்றுள்ளார். ஆனால், கம்பரோ இராமபிரானைக் கடவுள் அவதாரமாகவும் சித்திரிப்பதில் பெருநாட்டங் கொள்கிறார்.

அஃதாவது, வானுலகப் பரம்பொருள் மண்ணகத்தே மக்களுக்கு வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுவதற்காக, மானுட வடிவந்தாங்கி, 'நடையின் நின்றுயர் நாயகனாக' உலவி நிற்பதைக் காட்டுகிறார். இத்தகைய கம்பர் நெறியினைக் கிட்கிந்தா காண்டத்தில், நட்புக்கோள் படலத்தில் சுக்கிரீவன் வாயிலாகப் புலப்படுத்துகையில், பக்தி மேலோங்குவதைக் காணலாம். அதுவருமாறு:

"தேறினன் அமரர்க் கெல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறிஇப் பிறப்பில் வந்தார் மானுட ராகி மன்னோ!
ஆறுகொள் சடிலத் தானும் அயனும் என்று
இவர்கள்ஆதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா!"

இவ்வாறெல்லாம் இராமனைத் தெய்வ நாயகனாகப் பிறர் உணர்ந்து கொள்ளுமாறு, கம்பர் தம் கவிதைச் சித்திரங்களைப் பல இடங்களில் தீட்டியுள்ளார். அவற்றுள் மிகச்சிறந்த ஒன்று, மிதிலைக் காட்சிப் படலத்தில்,

"மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ" (38)

என வருதலைக் கண்டு போற்றலாம்.

தவத்தின் மாட்சி :

தமிழ்நாடு செய்த தவப்பயனாக அவதரித்த கம்பநாட்டாழ்வார், இராமாயணத்தில் பல இடங்களில் தவத்துப் பெருமையைத் தக்கவாறு புலப்படுத்திச் செல்கிறார்.

இராமாயணத்தை இயக்குகின்ற விசுவாமித்திரரும் வசிட்டரும் பெருந்தவமுனிவர்கள்.

அரசபோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இராமன் கைகேயியின் சொல் கேட்டுக் காட்டுக்குச் செல்வது, "தாங்கள் கடுந்தவம் மேற்கொள்வதற்காகவே"- இது காப்பியத்தின் போக்கு.

காப்பியத்தில் வரும் எதிர்க்கதை மாந்தர்களாகிய இராவணன், கும்பகர்ணன் முதலிய சிலர் கடுந்தவம் புரிந்தவர்கள், பலம் பெற்றவர்கள்.

இராமனது அம்பு பட்ட இராவணனைப்பற்றி, இராவணன் வதைப்படலத்தில் கம்பர்,

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதலவன் முன்நாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகு அனைத்தும்
செருக்கடந்த புயவலியும் திண்றுமார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன் தன்புனித வாளி"

என்று பாடுகையில், அவனது கடுந்தவத்தையும், வரத்தையும் குறிப்பிடுதலைக் காணலாம்.

மாரீசன் இராவணனுக்கு நல்லுரை கூறுகையில், அறவழியில் தவம் புரிந்து எல்லாச் செல்வங்களையும் பெற்ற நீ,அறத்திற்குப் புறம்பாகச் சென்று அவற்றை இழக்கலாமா? என்று குறிப்பிடுகிறான், இதனை மாரீசன் வதைப்படலத்தில் கம்பர்,

"திறத்திறனாலே செய்தவம் முற்றித் திருவுற்றாய்
மறத்திறனாலோ? சொல்லுதி சொல்லாய் மறைவல்லாய்
அறத்திறனாலே எய்தினை அது நீயும்
புறத்திறனாலே பின்னும் இழக்கப் பெறுவாயோ" (10)

என்று பாடிக்காட்டுகிறார்.

அழகு வழிபாடு (சௌந்தரிய ஆராதனை) :

'இராமன்' என்றாலே ரம்யமாகிய அழகுடையவன் என்பது பொருளாகும்; அதற்கேற்பக் கம்பர் இராமனையும் இராமனுக்குத் தேவியாகிய *சீதையையும்* மிகச்சிறப்பாக வருணிக்கிறார். இத்தகைய வருணனையும் ஆழ்வார்களைக் கூடியவரையில் பின்பற்றி அழகு வழிபாடாகவே அமைகின்றன.

குலசேகராழ்வார்க்கு இராமன்மீது தனியீடுபாடு உண்டு. எனவே, இராமாயண நிகழ்ச்சிகளைத் தம் பாசுரங்களிலே உள்ளுறுத்திப் பாடிக்களிக்கிறார். வைணவ திவ்ய தேசங்கள் சிலவற்றில் காணலாகும் அரங்கனையும் கண்ணனையும், திவ்யதேசத் தொடர்புடைய இறைவனையும் இராமனாகவே பாவித்துப் பாடி மகிழ்கிறார். திருக்கண்ணபுரத்து இறைவனை இராமனாகவே கருதிப்பாடுதலை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

"மன்னுபுகழ்க் கோசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ"

பொதுவாகவே, ஆழ்வார்கள் பச்சை, நீலம், கருமை வண்ணத் திருமாலின் அழகில் சொக்கி நிற்பர். தொண்டரடிப்பொடியாழ்வார்,

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்
செங்கண்
அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெரிதும் வேண்டேன் அரங்கமா நகரு
ளானே"

என்றும், திருப்பாணாழ்வார் திருமாலின் அழகை அனுபவித்துப் பாடுகையில்,

"நீலமேனி ஐயோ நிறைகொண்டதேன் நெஞ்சினையே
செய்யவாய் ஐயோ என்சிந்தை கவர்ந்ததுவே"

என்றும், திருமங்கையாழ்வார்,

"மைவளர்க்கும் மணியுருவம் மழைமுகிலோ,"

என்றும் பாடிச்சென்றுள்ளனர். இந்த அழகனுபவம் கம்பரைத் தூண்டிய நிலையில், அவர்,

"வெய்யோ னொளிதன் மேனியின்
விரிசோதியின் அடங்க
பொய்யோ எனுமிடை யாளொடும்
இளையானொடும் போனான்
மையோ! மரகதமோ! மறிகடலோ!
மழை முகிலோ
ஐயோ! இவன்வடி வென்பதோர்
அழியா அழகுடையான்"

என்று பாடி மனநிறைவு கொள்கிறார்.

ஆழ்வார்கள் அனுபவித்த திருமாலின் திருக்கோலக் காட்சியை அடிக்கடி, கம்பர் தம் மனத்தில் நினைவுபடுத்திக் கொண்டு களிப்படைபவர். எடுத்துக்காட்டாகப் பாலகாண்டத்தில் ஒரு பாடலைக் காண்போம். விண்ணிடத்தே உலவும் கார்மேகம் தன்பால் செந்தாமரை மலர்கள் கொண்டு, மண்ணிடத்தே இறங்கி வந்து நடந்து செல்வதேபோல், திருமால் கருடவாகனத்திலிருந்து மணிமண்டபத்திற்கு வருகின்ற காட்சியைக் கம்பன் பாடுகிறான், இதனை,

"கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுடர் இருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்" (192)

எனவரும் பாடலால் அறியலாம். இந்தக்காட்சியை இராமனுடன் இயைபுபடுத்திக் கம்பர் பாடிச்செல்லுதலை வாலிவதைப்படலத்தில் காணலாம்.

இராமன் ஏவிய அம்பால் வீழ்ந்துகிடக்கும் வாலியின் முன், இராமனே தோன்றி நிற்கும் காட்சியை வருணிக்கிறார் கம்பர், இதனைக்,

"கண்ணுற்றான் வாலி நீலக்
கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி
வருவதே போலும் மாலைப்
புண்ணுற்ற தனைய சோரி
பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்றாய் என்செய் தாய்! என்
றேசுவான் இயம்ப லுற்றான்" (82)

என வரும் பாடலால் போற்றி நிற்கலாம்.

இராமாயணத்தில் காப்பியத் தலைவன் இராமனைப் போலவே காப்பியத்தலைவி சீதையும் அழகின் பேரெல்லையில் உலவுகின்றாள். அவளை வருணிக்கும் கம்பர், தம் கற்பனையை முடுக்கிய வண்ணம் தம் திறமையைப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

பொன்னின் ஒளியையும் மலரின் நறுமணத்தையும் சந்தனத்தில் பொதிந்துள்ள குளுமையும் மின்னலின் சாயலையும் கொண்ட சீதை நடையழகுடைய அன்னப் பறவையும் அரம்பையரும், அருமையான சுவைமிகு அமிழ்தமும் வெட்கப்படும்படியான நிலையிலே அரச மணிமண்டபத்தை அடைந்தாள் என்பதைக் கம்பர், கோலங்காண் படலத்தில்,

"பொன்னின்ஒளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்
மின்னின்நிழல் அன்னவள்தன்
மேனியொளி மான
அன்னமும் அரம்பையரும்
ஆரமிழ்தும் நாண
மன்அவை இருந்தமணி
மண்டபம் அடைந்தாள்" (28)

எனப்பாடிக் காட்டியுள்ளார். சீதையின் சொல்லினிமையை வருணிக்கும் கம்பர் மிதிலைக் காட்சிப் படலத்தில்,

"தென்னுண் தேனிற் றீஞ்சுவை
செஞ்சொற் கவியின்பக்
கன்னி மாடத் தும்பரின்
மாடே . . . . . .".(23)

எனப்பாடிச் செல்வது மிகவும் சிந்தித்துப் போற்றுதற்குரியது

இத்தகைய அழகு நங்கையரின் பொலிவிலே சொக்கி நிற்கும் சூர்பனகையின் மனநிலையைக் கம்பர்,

"பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமையல்லால்
கண்பிற பொருளில் செல்லா, கருத்தெனின் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக்கு என்றால் என்படும் பிறருக் கென்றாள்"

எனப்பாடிக் காட்டுவது சிறந்த அழகனுபவத்தின் புலப்பாடாக அமையும். நற்பண்புடையவர்களின் அழகை மட்டும் வருணித்துச் செல்லாமல், தீயவர்களின் போலிப்புறவழகின் கவர்ச்சியையும் கவிஞர் வருணிக்கவே செய்கிறார். இராமனைத் தன் வயப்படுத்தச் சூர்ப்பனகை தன் அரக்கி வடிவத்தை மாற்றிக் கொண்டு, அழகிய திருமகள் போலக் கோலங்கொள்கிறாள், ஒய்யார நடைநடந்து கொண்டு இராமன் முன் வருகிறாள். அவளது நடையழகைப் புலப்படுத்தும் கவிஞர்,

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடிய ளாகி
அஞ்சொலின் மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

என்று பாடிச் செல்வதைக் காணலாம். கம்பரின் சந்த நயப்பாடலுக்கு இஃது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு என்று தமிழறிஞர்கள் பலரும் போற்றிப்புகழ்வர்.

சூர்ப்பனகை தன்னியல்பில் அழகற்ற அரக்கி, ஆனால், இராவணன் மனைவி மண்டோதரியோ, சீதையையொத்த அழகும் கற்பும் நிறைந்தவள். அவள் உறங்கும் சூழலைச் சித்திரிக்கும் கம்பர், அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி ஆகிய, தேவ மாதர்கள் மண்டோதரியின் கால்களை வருடவும் சாமரை வீசவும்

இன்னிசைச் சூழலில் கற்பக மலரின் நறுமணத்தை நுகர்ந்தவாறே மண்டோதரி துயில் கொள்கிறாள் என்று கூறி நிற்கிறார். இதனைச் சுந்தர காண்டம் ஊர் தேடு படலத்தில், கம்பர்,

"அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி
யாதியாயவர், மாரன்
சரம்பெய் தூணிபோற் றளிரடி கரந்தொடச்
சாமரை தடுமாறக்
கரும்பை யுஞ்சுவை கைப்பித்த சொல்லியர்
காமரங் கனியாழின்
நரம்பி னின்னிசை செவிபுக நாசியிற்
கற்பக விரைநாற"

எனப் பாடிச் செல்வதால் அறிந்துகொள்ளலாம்.

இலங்கையில் ஓரிடத்தில் கற்பும் அழகும் மிக்க மண்டோதரி இனிய சூழலில் உறங்குகிறாள். அதே வேளையில், அழகற்ற அரக்கியர் சூழ்ந்திருக்க, ஓவியம் புகையுண்டதே போன்று பொலிவற்ற நிலையில் சீதாபிராட்டி அசோக வனத்தில் வாடிக் காணப்படுகிறாள். இவ்வாறு அழகு நிலைகளை வெவ்வேறு கோணத்தில் கம்பர் சித்திரித்துக் காட்டுவது சிந்திக்கத்தக்கது.

தெய்வ நல ஆர்வத்தில் அடியவர்களின் களிப்பு

பொதுவாகவே பெருங்காப்பியத்தில் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை எனப்படும் எண் வகை மெய்ப்பாடுகள் - சுவைகள் இடம் பெறும்; இராமாயணத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிக்கும் சமநிலைச்சுவையும் உண்டு. அயோத்தியரசை ஏற்றுக்கொள் என்ற நிலையிலும், அந்த அரசைத் துறந்து காட்டுக்குச் செல் என்ற நிலையிலும், இராமன் மனவேறுபாடு இல்லாமல் சித்திரத்தில் அமைந்த செந்தாமரை மலர் போலப் பொலிவுடன் விளங்கினான். இந்தச் சமநிலைச் சுவையையும் சேர்த்து ஒன்பான் சுவைகளும் காப்பியத்தில் உண்டு. மேலும், உவகை நோக்கில் பொங்கிய பக்திச் சுவையும் அடியவர்கள் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றது.

நான்முகனும் தேடிக் காணமுடியாத நாராயணன் தனக்கு அருள் பாலிக்க எளிவந்த நிலையில் காட்சிகொடுக்க வந்ததைப் பிரகலாதன் போற்றி நிற்கிறான். அவனது பக்திமெய்பாட்டினைக் கம்பர், இரணியன் வதைப்படலத்தில்,

"நாடிநான் தருவன் என்றநல் அறிவாளன் நாளும்
தேடி நான்முகனும் காணாச் சேயவன் சிரித்தலோடும்
ஆடினான் அழுதான் பாடி அரற்றினான்
சிரத்தில்செங்கை
சூடினான் தொழுதான் ஓடி உலகெலாம்
துகைத்தான் துள்ளி" (128)

என்று சித்திரித்துக் காட்டுகிறார்.

இராம தூதுவனாக, இலங்கைக்குக் கடல் கடந்து சென்ற அனுமன், அசோக வனத்தில் சீதையைக் கண்ணுற்றதும், மகிழ்ச்சியாகிய மதுவுண்டு ஆடினான் பாடினான் என்கிறார் கம்பர். இதனைக் காட்சிப் படலத்தில்,

"வீடினது அன்றுஅறம்; யானும் வீகலேன்
தேடினென்; கண்டனென் தேவியே" எனா
ஆடினான் பாடினான் ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவினன் உவகைத்தேன் உண்டான்" (65)

என வரும் பாடலால் அறிந்து கொள்ளலாம்.

இராமனிடம் பக்தியார்வம் தழைக்க வாழ்பவன் இளவலாகிய பரதன். அண்ணனைப் பற்றிய செய்தி தெரிந்ததும் பரதன் கொண்ட ஆனந்த மேலீட்டைக் கம்பர்,

"வேதியர் தமைத்தொழும்; வேந்தரைத் தொழும்;
தாதியர் தமைத்தொழும்; தன்னைத் தான்தொழும்;
ஏதுமொன்றும் உணர்குறாது இருக்கும் நிற்குமால்
காதல்என் றதுவும்ஓர் கள்ளின் தோன்றிற்றே"
-யுத்த மீட்சிப் 251

என்று சித்திரித்துக் காட்டுதல் காண்க.

யுகசந்தி நடத்திக் காட்டும் கம்பரின் கவித்திறன்

திரேதாயுகத்தில் நடைபெற்றது இராமாவதாரம். அதே யுகத்தில் நடைபெற்ற பரசுராம அவதாரம் இராமனுடன் தொடர்பு கொண்ட இணைப்பு அவதாரமாகும். இந்தத் திரேதாயுகத்துக்கு முந்தியது கிருதயுகமாகும். அந்த யுகத்தில் நடைபெற்றனவாகிய மச்சம் கூர்மம் வராகம் நரசிம்மம் வாமன - திரிவிக்கிரம அவதாரங்கள், காப்பியப் போக்கிற்கு இயைபு உண்டாகுமாறு உவமை வாயிலாகவும் கிளைக் கதை வாயிலாகவும் கம்பர் புலப்படுத்தியது பொருத்தமே. ஆனால், திரேதாயுகத்துக்குப் பின்னர் வரும் துவாபரயுகத்துக் கண்ணனை எப்படியேனும் இராமகாதையில் குறிப்பிடக் கம்பர் ஆர்வங்காட்டுகிறார். அந்நிலையில், கோசல நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் சரயு நதியின் வெள்ளப்பெருக்குடன் கண்ணனது சிறுபருவ விளையாடல்களை இயைபுபடுத்திப் பாடிக்காட்டுகிறார்.

பாலும் உறைந்த மணமுள்ள தயிரும் வெண்ணெயும் சிவக்கக் காய்ச்சிய நெய்யும் ஆகியவற்றை உறியோடு வாரி உண்டு, குருந்த மரத்தையும் மருத மரத்தையும், சாய்த்து, ஆடுகளையுடைய இடைமகளிரின் வளையல்களையும் உடைகளையும் கவரும் தன்மையால் சரயுவெள்ளம், புள்ளிகளும் கீற்றுக்களுமுடைய (காளியன் எனும்) பாம்பில் நடம்புரியும் தூயவனான கண்ணபிரானை ஒத்துள்ளது. இதனைப் பால காண்டம் ஆற்றுப்படலத்தில்,

"செறிநறுந் தயிரும் பாலும்
 வெண்ணெயும் சேந்த நெய்யும்
உறியொடு வாரி உண்டு
 குருந்தொடு மருதம் உந்தி
மறியுடை ஆயர் மாதர்
 வளைதுகில் வாரும் நீரால்
பொறிவரி அரவின் ஆடும்
 புனிதனும் போலு மன்றே" (26)

என வரும் பாடலால் தெரிந்து கொள்ளலாம். கம்பனது கலைக் கற்பனை இயைபுக் கற்பனை எனும் நோக்கில் சமயப் பெருமையை உயர்த்திக்காட்ட எப்படித் துணைபுரிகின்றது என்பதை இதனால் உணரலாம்.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை

சென்ற இதழின் தொடர்ச்சி . . .

இஸ்ரேல்: பாலஸ்டைன் நாட்டைப்பற்றிய எல்லா விவரங்களும் மேலே குறிப்பிடப்பட்டன. அதன் ஓர் பாகமாக 1948 மே 14ல் நிறுவப்பட்ட சுதந்திர இஸ்ரேல் நாட்டைப் பற்றியும், அதற்கும் பாலஸ்டைன் நாட்டிற்கும் இன்று வரை ஏற்பட்டுள்ள உறவுகளைப் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

மொத்தம் 7993 சதுர மைல் பரப்பளவும் 1,976,000 மக்கள் தொகையையும் (1958 ஆண்டு கணக்குப்படி) உடைய இந்தச் சிறிய நாட்டில் 1,760,800 யூதரும், 1,44,500 முஸ்லீம்களும் வாழ்கின்றனர். இதை நிறுவிய ஐ.நா.சபை தீர்மானம் ஓர் அராபிய சுதந்திர அரசும் நிறுவப்படுதல் வேண்டுமென்று கூறி, இவ்விரு அரசுகளின் எல்லைகளையும் வரையறுத்தது. எகிப்து, ஜோர்டான், இராக், லெபனான், சிரியா முதலிய அராபிய நாடுகள் இஸ்ரேல் மீது போர்தொடுக்கவே, இஸ்ரேல் அவற்றைத் திருப்பித்தாக்கி, அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட சில பிரதேசங்களைக் கைப்பற்றியது. ஆயினும் அது இறுதியில் ஜோர்டான் ஆற்றுக்கு மேற்கேயுள்ள (West Bank-மேற்குக்கரை) பகுதியை ஜோர்டான் நாட்டுக்கும், காசா பகுதியை (Gaza strips)எகிப்துக்கும் இழந்தது. 1949 சனவரியில் போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், முத்தரப்புப் பேச்சு பயனளிக்கவில்லை; இஸ்ரேலியரும், அராபியரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். சூயஸ்கால்வாயில் வாங்கப்படும் சுங்கவரியில் ஒரு சிறுபங்கை மட்டும் எகிப்துக்குக் கொடுத்துவிட்டு, பெரும்பங்கை பிரிட்டிஷ் பிரஞ்சு பங்குதாரர்கள் எடுத்துக்கொண்டுவந்தனர். ஆகையால், எகிப்து 1956ல் சூயஸ்கால்வாயின் நிர்வாகத்தைத் தேசிய உடைமையாக்கவும், கொதித்தெழுந்த பிரிட்டனும், பிரான்சும் இந்தக் கால்வாய்த் தகராறில் எந்தத் தொடர்புமில்லாத இஸ்ரேலும் இணைந்து எகிப்தைத் தாக்கின. இஸ்ரேல் எகிப்திடமிருந்து சினய் தீபகற்பத்தையும் (Sinai Peninsula) காசா நிலப்பகுதியையும், சூயஸ் கால்வாய் மண்டலத்தை பிரிட்டிஷ், பிரஞ்சு துருப்புக்களும் கைப்பற்றின. சோவியத் ரஷ்யா, எகிப்து சார்பாக அச்சுறுத்த, எதிராக ஐக்கிய அமெரிக்கா எச்சரிக்கை விடுக்க, ஐ.நா பாதுகாப்புச் சபை கூடி, நிலைமையை விவாதித்தாலும், அதனால் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்ற இயலாமல், பிரிட்டனும்,

பிரான்சும் தள்ளுபடி அதிகாரத்தைக் (Veto power) கையாண்டனர். ஆயினும் ஐ.நா. பொதுச்சபைகூடி எகிப்துக்கு எதிரான மேற்படி மூன்று நாடுகளும் தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து விலகுதல் வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை இயற்றிற்று. ஓர் ஐ.நா அவசர காலப்படையும் அமைக்கப்பட்டது. இதுவே மேற்படி படைகள் விலகுதலை மேற்பார்வை செய்தல் வேண்டும். இந்த அவசரகாலப்படைக்கு (Emergency force) இந்தியாவும் தன்பங்கை அளித்தது. இந்தப்படை தனது நிலத்தில் நுழைதல் கூடாது என்று இஸ்ரேல் தடுத்தது. கால்வாய் மண்டலத்தில் முழு அமைதியும், பாதுகாப்பும் ஏற்படவில்லையாகையால், அவசரப்படையைத் திரும்பப் பெறக்கூடாதென்று அது கூறிற்று. இதற்கிடையில் ஐ.நா.சபை சிறிதும் எதிர்பாராதவாறு, இஸ்ரேலின் சிறந்த விமானப்படை 1967 ல் எகிப்தைத் தாக்கி, கெய்ரோவில் நிறுத்தப்பட்டிருந்த எகிப்திய விமானப்படையை எளிதில் தாக்கி அழித்தது, சினையையும், காசா பகுதியையும் அது கைப்பற்றிற்று. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் இரு சாராருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சினையிலிருந்து இஸ்ரேல் விலகும்படி செய்தார். ஆனால் இஸ்ரேல், தனது பாதுகாப்பையும், இராணுவக்காரணங்களையும் கருதி, காசா பகுதியையும், லெபனான், சிரியா நாடுகளிலுள்ள கோலன் மலைப் பகுதியையும், ஜோர்டான் ஆற்றின் மேற்குக்கரைப்பகுதியையும் தன்வசம் வைத்துக்கொண்டது.[1]

இன்றைய நிலை

இஸ்ரேலின் வசமுள்ள இந்த நிலங்களையெல்லாம் மீட்டுக்கொள்ளுதலில் அராபியர் பிடிவாதமாக இருக்கவும், இஸ்ரேல் இவற்றை விட்டுக் கொடுக்காமல் முரண்டு பிடிப்பதனாலும்தான் மேற்காசிய நாடுகளில் அமைதிகாண இயலாமல் இழுபறி அல்லது தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. எண்ணெய் வளமுள்ள அராபிய நாடுகள் உலகின் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எண்ணெயின் அளவைக் குறைத்துவிட்டன. இதனால் இந்தியா போன்ற நாடுகள் மிகவும் இடர்ப்பாடான நிலையிலுள்ளன. ஆனால் இராக் நாட்டின் மீது ஐக்கிய அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத்தடைகள் முற்றிலும் நீக்கப்படாத காரணத்தால், தனக்குத் தேவையான

1. இந்து நாளேட்டில் (18.12.2000) ஐ.நா. பொதுச்சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் திரு.சி.வி.நரசிம்மன் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து.

உணவுப்பொருளைப் பெற இயலாத நிலையிலுள்ள இராக்குக்கு உணவு தானியங்களை (கோதுமையை) இந்தியா கொடுத்து மாறாகக் கச்சா எண்ணெய்ப் பொருளை இறக்குமதி செய்வது என்ற ஓர் நல்ல ஒப்பந்தத்தை இராக்குடன் இந்தியா செய்துள்ளது. இது வரவேற்கத்தக்கது.

இஸ்ரேலைப் பற்றிக் கூறும்போது சியானிசம் (Zionism) என்ற ஓர் யூத அமைப்பைப் பற்றியும் நாம் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். யூத சமுதாயத்தாருக்கு ஒரு தனியான சுதந்திர அரசு பாலஸ்டைனில் இருத்தல் வேண்டுமென்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட ஒரு சர்வதேச இயக்கமே சியானிசம் எனப்படும். புனிதநாடாகிய பாலஸ்டைனுக்கு உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்கின்ற யூதர்கள் யாவரும் திரும்புதல் வேண்டுமென்ற குறிக்கோளை உருவாக்கியவர் தியோடன் ஹெர்சன் என்ற ஹங்கேரி நாட்டின் ஓர் பத்திரிகை ஆசிரியர். இவ்வாறு யூதர்களுக்குத் தனிநாடு இருந்தால்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்குமென்று அவர் உறுதியாக நம்பினார். இந்தக் கருத்தை உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்துவரும் யூதர்கள் எதிர்த்தாலும், பொதுவாக உலகெங்கும் பரவியுள்ள யூதர்கள் சமுதாயம் இந்த இயக்கத்தை ஆதரிக்கின்றது. 1950ல் இஸ்ரேலின் பாராளுமன்றம்-நெஸ்ஸட் (Knessett) உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் யூதர்கள் இஸ்ரேல் நாட்டிற்குத் திரும்பி வந்து, முழு குடிமை உரிமையுடன் வாழ்வதற்கு உரிமை உண்டு என்று கூறும் திரும்பி வரும் சட்டத்தைச் (Law of Return) செய்தது. இதன்படி 1958 கணக்குப்படி 1948க்கும், 1957க்குமிடையே 9,16,200 யூதர்கள் இஸ்ரேல் நாட்டில் வந்து குடியேறினர். இவ்வாறு இஸ்ரேல் நாடு 1948ல் நிறுவப்பட்டதும் சியானிசத்தின் நோக்கம் நிறைவேறிற்று என்றாலும், இந்த இயக்கம் இஸ்ரேலின் ஆதிக்கத்தை விரிவாக்கி அதைப் பாதுகாத்ததற்காகப் பாடுபட்டு வரும் ஒரு இயக்கமாக இருக்கிறது என்பதையும், இதனுடைய செயல்பாடுகள் பெருமளவில் ஹிட்லரின் நாசிச இயக்கத்தை ஒத்து, அராபியருடன் யூதர் நல்லிணக்கத்துடன் வாழ ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதையும், இதன் காரணமாகவே யூதர்களுக்கு ஒரு தனிநாடு அமைவதைக் காந்தியடிகள் விரும்பவில்லை என்பதையும் நாம் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். வறண்ட பாலை நிலமாக இருப்பதாலும் எண்ணிக்கையில் வளர்ந்துவரும் யூதர்கள் நாட்டின் ஒவ்வொரு சிறு நிலப்பகுதியையும் வேளாண்மைக்குப் பயன்படுத்தி உழைக்கின்றனர்.

உணவுப்பொருள்களை மிகுதியாக விளைவிக்க அரசும் ஆவன செய்கிறது. ஜெர்மனியில் யூதர்கள் பட்ட துன்பங்களுக்கு ஈடாக அந்நாடு இஸ்ரேலுக்கு 1963வரை நட்ட ஈடு வழங்கிற்று. ஐக்கிய அமெரிக்க நாடு தரும் உதவி மானியமும், வெளிநாடுகளில் வாழும் யூதர்கள் தரும் நன்கொடையும் இஸ்ரேலின் பொருளாதாரத் தேக்கத்தை ஓரளவு சரிசெய்கின்றன. மேலும் அதைச் சுற்றிலும் அராபிய நாடுகளிருப்பதால் நவீன போர்க்கருவிகளுடனும், போர்ப்பயிற்சியுடனும் கூடிய ஒரு வலுவான படையை அது வைத்திருக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இஸ்ரேலின் பொருளாதாரம் :

இஸ்ரேல் தொழில்துறையில் கணிசமாக முன்னேறியிருக்கிறது. பழவகைகள், துணிவகைகள் ஆகியவற்றை அது ஏற்றுமதி செய்து, அதற்குத் தேவையான உணவுப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கையும், கச்சா எண்ணெய், இரும்பு, எஃகு, இரசாயனப் பொருட்கள் முதலியவற்றையும் இறக்குமதி செய்கிறது. அதன் பீர் ஷீபா என்ற இடத்தில் சிறிது எண்ணெய் கிடைக்கிறது. யார்க்கோன் ஆற்றிலிருந்து அமைக்கப்பட்ட ஓர் குழாய் வழியாக டெல்அவிவ் நகரத்தின் வழியாகத் தண்ணீரைக் கொண்டுவந்து, பாலை நிலத்தில் 50,000 ஏக்கர் நிலத்தை விரிவாக்குவதற்காக ஜோர்டான் ஆற்றுநீரை இஸ்ரேலுக்குத் திருப்ப வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஆட்சி முறை :

ஆட்சிமுறையில் இஸ்ரேல் மக்களாட்சி முறையைப் பின்பற்றுகிறது. (இதற்கு மாறாக அராபியநாடு எதிலும் முழுமையான தேர்ந்தெடுக்கும் உரிமையோ, பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்போ, ஆட்சியில் மக்களுக்குப் பங்கோ இல்லை) இஸ்ரேலின் நெஸ்ஸெட் என்ற பாராளுமன்றம் ஒற்றைச் சபை அமைப்பை உடையது. அதன் உறுப்பினர்கள் வயது வந்தோர் யாவராலும் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதன் அரசியலில் தொழிற்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மிதவாதக்கட்சி, தனியார் உடைமை உரிமையை ஆதரிக்கும் சியானிஸ்ட் கட்சி முதலியவை பங்கு கொள்ளுகின்றன. இதுபோல் அரபுநாடுகளில் பல கட்சிகளை அமைப்பதற்கு உரிமைகளில்லை. அவை சர்வாதிகார நாடுகளே. அவை இஸ்ரேலை

வெற்றியாக எதிர்த்து நிற்க முடியாத நிலைக்கு இது ஒரு காரணமாகுமென்று ஒரு வல்லுநர் கருதுகிறார்.

பாலஸ்டைனுக்கும், இஸ்ரேலுக்குமிடையே எழும் பூசல்களிலெல்லாம் மற்ற அராபிய நாடுகள் பாலஸ்டைனுக்கு உதவி செய்கின்றன. ஆகையால் அவற்றைப் பற்றியும் சிறிது கூறலாம்.

குவைத்

ஏறக்குறைய 5800 சதுர மைல் பரப்பளவில் பெரும்பகுதி பாலைநிலம். தலைநகரம் குவயத். வெளிநாட்டு உறவுகளை நெடுங்காலமாகப் பிரிட்டன் கண்காணித்து வந்தது. தென்பகுதியிலுள்ள எண்ணெய் வயல்களிலிருந்து கிடைக்கும் வருமானமே அந்நாட்டின் தலைவருக்குக் (ஷேக்கிற்கு) கிடைக்கும் வருமானத்தில் ஐந்தில் நான்கு பங்கு ஆகும். பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனம், வளைகுடா ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுக்கு எண்ணெய் வருமானத்தில் மீதிப்பங்கு கிடைக்கிறது. அண்மையில் வடபகுதியில் மிகப்பெரிய எண்ணெய்வயல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இது ஒரு சிறிய நாடாயினும், இதற்குக் கிடைக்கும் அளவிற்பெரிய எண்ணெய் வருமானம் வளர்ச்சித்திட்டங்கள், மின்சார உற்பத்தி, உலகிலேயே மிகப்பெரிய கடல் நீர் வடிகட்டும் தொழில், சாலைகள், இலவசக்கல்வி, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், உடல் நிலை மாடம் (சானடோரியம்) முதலியவற்றுக்குச் செலவிடப்படுகிறது. அண்மையில் நடுநிலை மண்டலத்தில் (Neutral zone) கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெயை அமெரிக்கன் எண்ணெய் நிறுவனம் எடுத்துச் சுத்தம் செய்து விற்கிறது. 1990ல் இராக் குவயத்தைத் தாக்கிக் கைப்பற்றியபோது, அமெரிக்கா இராக்கைத் தாக்கி, குவயத்தை விடுவித்தது.

இராக்

முன்பு மெசொபொடேமியா என்றழைக்கப்பட்ட, யூஃப்ரட்டீஸ், டைகிரீஸ் ஆகிய இரண்டு ஆறுகளுக்கிடையே இந்த நாடு பரப்பளவிலும், (172,000 சதுர மைல்) மக்கள் தொகையிலும் (ஏறக்குறைய 7 மில்லியன்) மற்ற பல அராபிய நாடுகளைவிடப் பெரியது. மக்கள் யாவரும் முஸ்லிம்கள், அராபிய மொழி பேசுபவர்கள். நெடுங்காலமாக அரசியலமைப்புக்கு உட்பட்ட

முடியாட்சி இதில் இருந்தது, 1958லிருந்து குடியரசாக இருக்கிறது. இருமன்றச் சட்டசபை இருக்கிறது.

பொருளாதாரத்தில் இராக் மற்றெல்லா அராபிய நாடுகளையும் விட மிகவும் சிறந்த வளர்ச்சி பெற்ற நாடு. இதன் முக்கிய செல்வம் இதன் எண்ணெய் வளம் தான். இராக் எண்ணெய் நிறுவனம் எண்ணெய்க் குழாய்களை அமைத்து, மத்திய தரைக்கடல் துறைமுகத்துக்குக் கொண்டு போய் ஏற்றுமதி செய்கிறது. தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு எண்ணெயிலிருந்து கிடைக்கிறது. இதில் 70 சதவீத மூலதனம் போடுவதற்காகவும், பொதுத்துறைப் பணிகள், வெள்ளத்தடுப்புப் பணிகள், பாசனவசதிகள், சமூக நலப்பணிகள் முதலியவற்றுக்காகவும் செலவிடப்படுகிறது. மற்ற உற்பத்திப்பொருட்கள் கோதுமை, பார்லி, அவரை, அரிசி, பேரீச்சம்பழம் (பேரீச்சம்பழத்தின் மொத்த உலக அளவில் 80 சதவீதம் இராக்கிலிருந்து வருகிறது) இந்நாட்டின் செல்வவளர்ச்சி காரணமாகவும், இதன் முன்னேற்றத்தின் காரணமாகவும், இதை மற்ற அராபிய நாடுகளும், உலக நாடுகள் பலவும் இதன் நட்புறவுக்குப் பெரும் மதிப்புக் கொடுத்துவருகின்றன. இதுவும் மற்ற அராபிய நாடுகளைப் போல சர்வாதிகார இயல்புடைய ஆட்சியை உடையதுதான், முழுமக்களாட்சி இயல்புடையது அன்று.

இஸ்ரேலிய பாலஸ்தீனப் பிரச்சனையில் மத்திய கிழக்கிலுள்ள எல்லா அரேபிய நாடுகளும் பாலஸ்தீனியருக்கு ஆதரவு அளிப்பதால் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் இங்கு சிறிது குறிப்பிடலாம்.

லெபனான்

1918 வரை ஓட்டோமான் துருக்கியப் பேரரசின் ஓர் மாகாணமாக இருந்த இந்த மத்தியதரைக்கடல் கரையோர சிறியநாடு. பிரிட்டிஷ் படைகளால் கைப்பற்றப்பட்டு, பிரஞ்சுப் பொறுப்பாட்சியிலிருந்து வந்தது. இரண்டாம் உலகப்போரில் பிரிட்டன் இதை விடுவித்து, 1941ல் சுதந்திர நாடாக்கிற்று. இதன் 2 மிலியன் மக்கள் தொகையில் பாதிப்பேர் கிறிஸ்தவர், பாதிப்பேர் அராபிய முஸ்லிம்கள். இவர்களில் பெரும்பான்மையோர் பாலஸ்டைன் அகதிகள். மக்கள் ஓரளவு அரசியலுரிமை பெற்றவர்கள். பழங்கள், புகையிலை, பட்டு, பருத்தி முதலியவை உற்பத்திப் பொருட்கள். இராக்கிலிருந்து இங்கு குழாய்கள் மூலம் வரும் கச்சா எண்ணெய் இங்கு வரும் கப்பல்களுக்கு அளிக்கப்படுகிறது. சைடன், டிரிபொலி

முதலிய துறைமுகங்களில் கச்சா எண்ணெய் பக்குவப் படுத்தப்படுகிறது. வயது வந்தோருக்கு வாக்குரிமை மூலம் ஒரு ஒற்றை மன்றச் சட்டசபை தேர்ந்தெடுக்கப்படுகிறது. இவருள் மூன்றில் இரண்டு பங்கினர் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஜனாதிபதி கிறிஸ்தவர், தலைமை அமைச்சர் முஸ்லிம். இருசமயத்தாருக்கும் சட்டப்படி ஆட்சியில் சமபங்கு உண்டு.

சிரியா

முதல் உலகப்போருக்குப்பின் பிரான்சினுடைய காப்பு நாடாக இருந்து பின் சுதந்திரம் பெற்றது. மக்கள் பெரும்பாலோர் முஸ்லிம்கள். பல அரசியல் கட்சிகளிருந்ததனால் நிலையில்லாத கூட்டணி அரசுகள் இருந்தன. இது 1958ல் எகிப்துடன் இணைந்து ஐக்கிய அராபியக் குடியரசாக (U.A.R) ஆயிற்று. இதன் முக்கிய தொழில் வேளாண்மை. இதில் எண்ணெய் வளம் இல்லையாயினும், இதன் வழியாக இராக் அரேபிய எண்ணெய் நிறுவனம் அமைத்துள்ள குழாய்களைப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருமானம் பெறுகிறது.

எகிப்து

இது ஆசியா கண்டத்திலுள்ள அராபியநாடு அன்று. ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகிழக்கு மூலையில் 386,198 சதுரமைல் பரப்பளவும், 24,840,000 மக்கள் தொகையும் உடைய நாடு. இவ்வளவு பெரியநாட்டின் வடக்கில் பாயும் நைல் ஆறு ஓரளவு வளம் பெருக்கினாலும், 13,500 சதுர மைல் பரப்பளவு நிலந்தான் பயிரிடப்படுகிறது. மக்கள் நூபியர், அராபியர், நீகிரோவர் கலந்த இனத்தவர், இஸ்லாம் சமயத்தார். முதலில் துருக்கியரும் (1918 வரை) பின்னர் பிரிட்டிஷாரும் (1936 வரை) ஆட்சி செலுத்தினர். 1936ல் சுதந்திரம் கிடைத்தாலும், நாட்டில் வளர்ச்சிகுன்றி, பிரிட்டிஷாருக்குப் பல சலுகைகள் (சூயஸ்கால்வாய் சுங்கவரி) அளிக்கப்பட்டு வந்ததனால், நாட்டிலிருந்து முடியாட்சி முறையை மக்கள் வெறுத்தனர். 1959ல் இராணுவம் திடீர்ப்புரட்சி செய்து, சிலரிடமிருந்த பெருமளவு நில உடைமையை ஒழித்து, வரியை உயர்த்தி, வரவுசெலவுத் திட்டத்திலிருந்து வந்த குறையை நிறைவுசெய்து, நீள இழைப்பஞ்சு, அரிசி, கரும்பு, சோளம் முதலிய விளைபொருட்களுக்கு ஊக்கம் அளித்தது. 1953ல் ஒரு குடியரசாக அமைக்கப்பட்ட எகிப்திய

கேபினெட் அரசாங்கம், 1956ல் அமெரிக்க, பிரிட்டிஷ் மூலதனங்கள் நிறுத்தப்பட்ட காரணத்தால், சூயஸ் கால்வாயைத் தேசிய உடைமையாக ஆக்கிற்று. 1956ல் இஸ்ரேலும், பின்னர் பிரான்சும், பிரிட்டனும் எகிப்தைத் தாக்கின. ஐ.நா.வேண்டுகோளின்படி போர் நிறுத்தப்பட்டு, அயலவர் படைகள் எகிப்திலிருந்து வெளியேறின. காசாநிலப்பகுதியை ஐ.நா.1949ல் பாலஸ்டைனில் அமைக்கப்பட்டுள்ள அராபிய அரசுக்கு ஒதுக்கிற்று. 1945ல் எகிப்து அராபியக் கழகத்தில் சேர்ந்தது.

அரேபியா அல்லது சவூதி அரேபியா அல்லது அரேபிய தீபகற்பம்

இது எட்டு நாடுகளடங்கியது. அவையாவன. பஹ்ரைன், குவயத், மஸ்க்கட், ஓமன், சவூதி அரேபியா, ஏமன், ட்ருசியல் கோஸ்ட் சுதந்திர அரசுகள், ஏடன் நாடு ஆகியவை. இவற்றுள் சவூதி அரேபியா பரப்பளவில் (927,000) சதுரமைல்) ஏனையவற்றினும் பெரியது. மக்கள் தொகை ஏழு மில்லியன். முஸ்லீம்களின் புனிதத் தலமாகிய மெக்காவும், ரியாத் என்பதும் தலைநகரங்கள்.முஸ்லீம் புனிதப்பயணிகள் மீது விதிக்கப்படும் வரியும், மண்ணெண்ணெயிலிருந்து கிடைக்கும் ஊதியமும் அரசுக்கு வருமானங்களாம். இந்த நாட்டின் எண்ணெய் வளமே உலகிலுள்ள மற்ற எண்ணெய் வயல்களினும் அளவிற் பெரியது. இந்நாட்டின் பெருமளவு நிலப்பரப்பில் கிடைக்கும் மண்ணெண்ணையைப் பக்குவம் செய்து விற்கும் உரிமையை அரம்கோ என்ற அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் 1933லிருந்து பெற்று, கிடைக்கும் ஊதியத்தில் சரிபாதியைத் தாமும், மற்ற பாதியை அராபிய அரசாங்கத்துக்கும் அளிக்கின்றன. இந்த வருமானமே இந்நாட்டைப் பொருள் வளமிக்கதாக ஆக்குகிறது. அரசாங்கம் இந்த வருமானத்தின் ஒரு பகுதியை சுகாதாரம், கல்வி, சமூகப்பணிகள், வேளாண்மை, போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றுக்காகச் செலவிடுகிறது. அரசர் அரசாங்கத்தின் தலைவர், கேபினெட் அமைச்சரவை செயல்படுகிறது. இதன் படைகள் அமெரிக்க, ரஷ்யப் படைக்கருவிகளை வாங்குகின்றன. இந்நாடு எகிப்துடன் உடன்படிக்கை செய்துள்ளது. மேலும் இது அராபியக்கழகத்தில் மதிப்பு மிக்க ஒரு உறுப்பினர்.

பஹ்ரைன்

213 சதுரமைல் பரப்பளவும், 130,000 மக்கள் தொகையுமுடைய இந்நாடு பாரசீக வளைகுடாவின் மேல்கரையில் பல தீவுகளடங்கியது. மக்களுள் பெரும்பாலோர் முஸ்லீம்கள், ஏனையோர் பிரிட்டன்கள், அமெரிக்கர், இந்தியர், பாரசீகர் முதலியோர். தலைநகரம் மனாமா. இது 1861லிருந்து பிரிட்டிஷ் காப்புநாடாக இருக்கிறது. இதுவும் எண்ணெய்வளம் மிக்கது, இதை எடுத்துப்பதப்படுத்தி விற்கும் உரிமையை, பஹ்ரைனும், அமெரிக்க நிறுவனங்களும் பெற்றுள்ளன. இதன் எண்ணெய் பக்குவம் செய்யும் நிறுவனம் உலகின் மிகப்பெரிய நிறுவனங்களுள் ஒன்று. பாரசீகவளைகுடா நடுவில் இது இருப்பதால் இதன் வழியாகவே உலக நாடுகளிடையே வாணிபமும் விமானப் போக்குவரத்தும் நடைபெறுகிறது. கல்வித்துறையிலும் சுகாதார வளர்ச்சியிலும் இந்நாடு முன்னேறியுள்ளது.

கரை ஒப்பந்த நாடுகள் (Trucial Coart State) :

மற்றவற்றினும் மிகப்பெரியது. மேலும் இது இராணுவ முக்கியத்துவமுடையது புரெய்மி (Buraimi) என்ற பாலைவனச் சோலைக்கும் (Oasis) மஸ்க்கட் ஓமனுக்குமிடையே அமைந்துள்ளது. இதுவும் எண்ணெய் வளமுடையது. இதனை ட்ரூசியஸ் கோஸ்ட் பெட்ரோலிய வளர்ச்சி நிறுவனமும், பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனமும் எடுத்துப் பதம் செய்து விற்று, வரும் ஆதாயத்தில் சரிபாதியை அரசருக்கு (ஷேக்) அளிக்கின்றன.

மஸ்க்கட் - ஓமன் :

அரேபியாவின் கிழக்கு முனையிலுள்ள 82,000 சதுரமைல் பரப்பளவுள்ள ஒரு சுதந்திரநாடு. மக்கள் தொகையில் பெரும்பாலோர் அராபியர். இதன் ஆட்சியாளர் (சுல்தான்) பிரிட்டனுடன் நட்பு ஒப்பந்தமும், வாணிப ஒப்பந்தமும் செய்துள்ளார். இதன் ஏற்றுமதிப்பொருட்கள் பழவகைகள், மீன் முதலியவை.

குவட்டார் (Qatar)

பாரசீக வளைகுடாவிலுள்ள இந்த சுதந்திர நாடு 8,000 சதுர மைல் பரப்பளவும், 50,000 மக்கள் தொகையும் உடையது. இதுவும் எண்ணெய் வளமுடைய பிரிட்டிஷ் காப்பு நாடு. இதன் அரசர் சுல்தான் எனப்படுவார்.

ஏமன் (Yemen) :

இது செங்கடலின் தென்முனையில் அரேபியாவிலுள்ள ஒரு சுதந்திர நாடு. 75,000 சதுரமைல் பரப்பளவும், 5 மிலியன் மக்கள் தொகையும் உடைய இந்நாட்டின் தலைநகரங்கள் டெய்ஸ், சானா ஆகியவை. இது எகிப்து, அரேபியா, ரஷ்யா முதலிய நாடுகளோடு நட்பு ஒப்பந்தம் செய்துள்ளது. இது 1958லிருந்து ஐக்கிய அராபிய அரசுகளின் கூட்டு இணையத்தில் சேர்ந்துள்ளது. இது வளமுள்ள ஒரு நாடு, இது காபி, தானியங்கள், தோல் முதலியவற்றை ஏற்றுமதி செய்கிறது. இதன் எண்ணெயை ஒரு அமெரிக்க நிறுவனம் எடுத்துப் பதனிட்டு விற்கும் உரிமை பெற்றுள்ளது.

ஏடன் காப்பு நாடு தெற்கு (Aden Protectrate) :

தெற்கு அரேபியாவிலுள்ள இது 112,000 சதுர மைல் பரப்பளவும், 900,000 மக்கள் தொகையும் உடையது. இதிலுள்ள பல சிற்றரசுகள் பிரிட்டனுடன் காப்பு ஒப்பந்தங்கள் செய்துள்ளன. பாசன வசதி பெற்ற சில இடங்களில் பருத்தி விளைகிறது.

ஏடன் குடியேற்ற நாடு (Aden protectrate) :

இதன் பரப்பளவு 80 சதுர மைல், மக்கள் தொகை 14,000. இவருள் பெரும்பாலோர் அராபியர். இது மேற்கு - கிழக்கு கடல்வழி செல்லும் கப்பல்களுக்குக் கரியும், எண்ணெயும் வழங்கும் துறைமுகம். இதை 1839ல் பிரிட்டன் கைப்பற்றியது. 1937வரை இந்திய அரசாங்கம் அட்சி செய்தது. அரசாங்கத்தில் ஒரு ஆளுநரும், ஒரு நிர்வாகக்குழுவும், ஒரு சட்டமன்றமும் இருக்கின்றன. உறுப்பினருள் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆட்சியில் பங்கு கொள்ளும் ஆர்வத்துடன் இருப்பவர்கள் வணிகரும், அரசாங்க

அலுவலரும் ஆவர். ஏடனிலுள்ள மிகப்பெரிய கரி, எண்ணெய் சேமிப்பு நிலையம் அங்கு வரும் கப்பல்களுக்கு இவற்றை விற்கும் தொழிலைச் செய்கிறது.

மேலே குறிப்பிட்ட நாடுகளெல்லாம் இன, சமய அடிப்படையில் இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனியருக்கு ஆதரவளிக்கின்றன. இரான், ஆப்கானிஸ்தான் நாட்டினர் அராபிய இனத்தவரல்லர், இவர்கள் பண்டைய பாரசீக, மத்திய ஆசிய மக்கள் வழியினர். ஆனால் சமய அடிப்படையில் இவையும், பாகிஸ்தானும் பாலஸ்தீனியருக்கு ஆதரவளிக்கின்றன.

(தொடரும் ...)

அன்பு அச்சகம், மதுரை. ✆ 741116